A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 21 / 2024</u>**

திரு.ரா.அழகுமணி,
த/பெ.ராசு,
18, குறத்தி குடித்தெரு,
சேந்தமாங்குடி வடக்கு,
அய்யம்பாளையம், ஏவூர் அஞ்சல்,
முசிறி – 621202.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு.S.செல்வகுமார்)

எதிர்

1) மேற்பார்வை பொறியாளர்,
**திருச்சி** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மன்னார்புரம் மெயின் ரோடு, திருச்சி – **620 020.**

2) செயற்பொறியாளர்/ இ&கா/ முசிறி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV முசிறி SS வளாகம், தாத்தயங்கார்பேட்டை ரோடு,
முசிறி, திருச்சி – 621 211.

3) உதவி செயற்பொறியாளர்/ இ&கா / முசிறி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV முசிறி SS வளாகம், தாத்தயங்கார்பேட்டை ரோடு,
முசிறி, திருச்சி – 621 211.

4) உதவி மின்பொறியாளர்/ இ&கா / அய்யம்பாளையம்,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ARK வளாகம், 5, 41–E1 சேலம் மெயின் சோடு,
அய்யம்பாளையம் அஞ்சல், முசிறி, திருச்சி – 621 202.

. . . எதிர்மனுதாரர்கள்

(திரு,V.அழகேசன், செயற்பொறியாளர்/இ.கா./முசிறி
திரு.R.சந்தானம், உதவி செயற்பொறியாளர்/இ.கா./முசிறி
திரு.R.ரமேஷ், உதவி மின்பொறியாளர்/இ.கா./அய்யம்பாளையம்)

<u>மனு பெறப்பட்ட நாள்: 27-03-2024</u>

<u>கேட்புரை நாள்: 16-05-2024</u>

<u>ஆணை நாள்: 27-05-2024</u>

27.03.2024 அன்று பெறப்பட்ட திரு.ரா.அழகுமணி, த/பெ.ராசு, 18, குறத்தி குடித்தெரு, சேந்தமாங்குடி வடக்கு, அய்யம்பாளையம், ஏவூர் அஞ்சல், முசிறி – 621202 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 21/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 16.05.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

<u>ஆணை</u>

1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>

தன்னுடைய நிலத்தில் தனது அனுமதியின்றி அமைக்கப்பட்ட தாழ்வழுத்த மின்பாதையை மாற்றி அமைத்து தருமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 <u>வழக்கின் சுருக்கம்:</u>

2.1 அய்யம்பாளையம் வருவாய் கிராமம், புல எண்.167/3, 165/4A மற்றும் 165/4C நிலத்தில் தன்னுடைய ஒப்புதல் இல்லாமல் அமைக்கப்பட்ட தாழ்வழுத்த மின்பாதையை வாரிய செலவில் வேறு பாதையில் மாற்றி அமைத்து தருமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய புகார் மனுவின் அடிப்படையில் உதவி செயற்பொறியாளர் / இ& கா/ முசிறி மற்றும் உதவி மின்பொறியாளர் /இ.கா./ /அய்யம்பாளையம் அவர்கள் மேற்படி இடத்தை 23-04-2024 அன்று கள ஆய்வு செய்யப்பட்டு தாழ்வழுத்த மின்பாதை செல்வது உறுதி செய்யப்பட்டது. மேற்கூறிய மின்பாதையை சுமார் 35 வருடத்திற்கு

முன் நிறுவப்படும் போது எவ்வித ஆட்சேபனை தெரிவிக்காத காரணத்தினால் வாரிய செலவில் மின்பாதையை மாற்றி அமைக்க இயலாது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 தன்னுடைய நிலத்தில் தனது அனுமதியின்றி அமைக்கப்பட்ட தாழ்வழுத்த மின்பாதையை மாற்றி அமைத்து தருமாறு மேல்முறையீட்டாளர் 20.12.2023 அன்று திருச்சி மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருச்சி மின்பகிர்மான வட்டம் 15.02.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>**

3.1 திருச்சி மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 15.02.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"இருதரப்பு சாட்சியங்களையும் ஆவணங்களையும் ஆய்வு செய்த மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் திருச்சி, முசிறி கோட்டம், அய்யம்பாளையம் வருவாய் கிராமம், புல எண். 167/3 ல் அமைக்கப்பட்டுள்ள 11 KV மங்காரப்பேட்டை உயரழுத்த மின்பாதையும், புல எண். 165/4A மற்றும் 165/4C அமைக்கப்பட்டுள்ள சேந்தமாங்குடி SS / 100 KVA தாழ்வழுத்த மின்பாதையும் பல ஆண்டுகளுக்கு முன்பே நிறுவப்பட்ட மின்பாதை எனவும் மின்பாதை அமைக்கப்படும் போது எவ்வித ஆட்சேபணையும் மின் நுகர்வோரிடமிருந்து பெறப்படவில்லை எனவும் மின்பாதை அமைக்கப்படும் போதே மனுதாரர் ஆட்சேபணை தெரிவித்திருந்தால் மின்பாதையை வேறு பாதையில் மாற்றி அமைத்திருக்கலாம் என எதிர் மனுதாரர் கூறுவது ஏற்புடையதே. எனவே, மேற்குறிப்பிட்ட புல எண்ணில் அமைக்கப்பட்ட மின்பாதையை தற்போது வேறு பாதையில் மாற்றி அமைக்கும்படி மனுதாரர் கோரும் பட்சத்தில் மனுதாரர் DCW முறையில் விண்ணப்பம் அளித்து அதற்கான மதிப்பீட்டுத்தொகையை செலுத்தும் பட்சத்தில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதி Notification No. TNERC SPR/9/1, Dated: 21.07.2004 Distribution Standards of Performance-7. Shifting of Service Connection/Deviation of Lines and*

*Shifting of Equipments ன் படி மின்பாதையை மாற்றி அமைக்குமாறு எதிர் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது. இவ்வழக்கில் மனுதாரர் கோருவது போல, வாரிய செலவில் மனுதாரருடைய நிலத்தின் வழியே செல்லும் மின் கம்பம் மற்றும் மின்பாதையை மாற்றி அமைக்க வாரிய விதிகளின்படி சாத்தியக்கூறுகள் இல்லை என மனுதாரருக்கு வலியுறுத்தப்பட்டு மன்றம் முடித்து வைக்கப்பட்டது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 16.05.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு.S.செல்வகுமார் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு,V.அழகேசன், செயற்பொறியாளர்/இ.கா./முசிறி, திரு.R.சந்தானம், உதவி செயற்பொறியாளர்/இ.கா. /முசிறி, திரு.R.ரமேஷ், உதவி மின்பொறியாளர்/இ.கா./அய்யம்பாளையம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் தனது ஒப்புதல் இல்லாமல் திருச்சி, முசிறி கோட்டம், அய்யம்பாளையம் வருவாய் கிராமம், புல எண். 167/3, 165/4A மற்றும் 165/4C உள்ள

நிலத்தில் அமைக்கப்பட்ட மின் கம்பம் மற்றும் மின்பாதைகளை வாரிய செலவில் வேறு பாதையில் மாற்றி அமைக்கும்படி தெரிவித்துள்ளார்.

5.2 மேல்முறையீட்டாளர் இந்திய தொலைத்தொடர்பு சட்டம் 1885–ன் பிரிவு 10–ன்படியும் மற்றும் மின்சார சட்டம் 2003–ன் பிரிவு 164–ன் படியும் மின்கம்பமோ அல்லது மின்பாதையையோ எந்த ஒரு நிலத்திலும் அமைப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. அதே சமயம் ஒரு நபருக்கு சொந்தமான நிலத்தில் மின்கம்பமோ அல்லது மின்பாதையையோ அமைக்கப்படவேண்டிய நேர்வில் இந்திய தொலைத்தொடர்பு சட்டத்தின் பிரிவு 10(4)–ன்படி நிலவுடமையாளருக்கு முழு நஷ்டஈடு தரப்பட வேண்டும். ஆனால் எதிர் மனுதாரர் இது வரை ஒரு பைசா கூட நஷ்டஈடு தரவில்லை என்று தெரிவித்துள்ளார்.

5.3 மேல்முறையீட்டாளர் சான்றாதாரமாக 1னாவது கீழ்கண்ட உயர்நீதமன்ற ஆணை குறிப்பிட்டுள்ளார் அதாவது :

பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட், திருச்சிராப்பள்ளி மற்றொரு எதிராக தமிழ்நாடு மின்சாரவாரிய பிரதிநிதி, அதன் தலைவர் மற்றவர்கள் சென்னை உயர் நீதிமன்றம் (10 ஜனவரி, 2007) வழக்கு எண் 2001 இன் ரிட் மனு எண்.3713

*ஒரு தனியாருடைய பட்டா நிலத்தில் மின்கம்பமோ அல்லது மின்பாதையையோ நிறுவும்பொழுது இந்திய தொலைத்தொடர்பு சட்டத்தின்படி முன்அனுமதியோ அல்லது நஷ்டஈடோ அளிக்கப்படவேண்டும் தனியார் நிலத்தில் ஒப்புதல் பெறாமல் மின்கம்பம் நிறுவினால் அது சட்டத்திற்கு புறம்பான செயலாகும். 1910 இந்திய மின்சார சட்டத்தின் 12(2) ஆவது பிரிவு (இந்திய மின் விதிகள் 1910)*

*Based upon Section12(2), it was held by a learned Judge of this Hon'ble Madras High Court in Bharat Heavy Electricals Ltd vs. Tamil Nadu Electricity Board (2) MLJ 111 that the erection of poles in the property of the person, without obtaining his consent under Section 12(2) of the said Act, was illegal.*

*Bharat Heavy Electricals Ltd., Tiruchirapalli Another v. The Tamil Nadu Electricity Board Rep. By Its Chairman Others Madras High Court (10 Jan, 2007)*

மேல்முறையீட்டாளர் சான்றாதாரமாக 2வது கீழ்கண்ட உயர்நீதமன்ற ஆணை குறிப்பிட்டுள்ளார் அதாவது :

மின் கம்பத்தை கட்டணமில்லாமல் இடமாற்றம் செய்ய வைத்த நீதிமன்றம்: High Court ruling on removal of electric poles from private land

ஒப்புதல் பெறாமல் தனியார் நிலத்தில் நிறுவப்பட்ட மின் கம்பத்தை ஆட்சேபத்தின் பேரில் அகற்றிட (இடமாற்றம் செய்திட) சம்மந்தப்பட்டவரிடம் இருந்து எவ்வித கட்டணத்தையும் மின் வாரியம் கோர கூடாது" – சென்னை உயர்நீதிமன்றம்.

*WRIT APPEAL (MD) No.932 OF 2010 M.P.(MD) No.2 OF 2010 DATED: 22/02/2011, The Superintending Engineer Vs M.Sengu Vijay.*

*High Court ruling on removal of electric poles from private land*

*"TNEB would have paid compensation to erstwhile owner of property"*

*The Tamil Nadu Electricity Board cannot insist a landlord to pay the expenses for shifting the electric poles situated on his property if such poles have been erected without obtaining the consent of the previous owner of the land, the Madras High Court Bench here has ruled.*

*Justices N. Paul Vasanthakumar and R. Subbiah passed the ruling while dismissing a writ appeal filed by the TNEB challenging an order passed by a single judge on April 20 to remove the electric poles from a private land at Alangaperi in Tirunelveli district without insisting on payment of expenses.*

*The judges refused to accept the Board's contention that the erstwhile owner of the property had not objected to erection of the electricity poles and hence such failure to object must be construed as implied consent given by him for erecting those poles.*

*Referring to various provisions of the Indian Telegraph Act, the judges said that the Board would have paid compensation to the erstwhile owner of the property if it had obtained his consent to erect the poles.*

*However, there was no document to show that such compensation was paid.*

*In his affidavit filed along with the writ petition filed before the single judge, M. Sengu Vijay of Tirunelveli said that he purchased a property at Alangaperi in April 2008. Thereafter, he sub-divided the land, obtained patta (land ownership document) and applied for lay-out approval.*

*The Director of Town and Country Planning approved the lay-out in February 2009 with a rider to remove six electric poles situated on the land for the last 22 years for supplying electricity to the villagers besides five other poles erected in 2007 for the use of Tamil Nadu Water and Drainage Board.*

*On an oral enquiry, the land owner was told that it would cost anywhere between Rs.80,000 and Rs.1 lakh to remove those poles.*

*He agreed to pay the amount and requested the TNEB to start work. But to his surprise, the Board suddenly demanded Rs. 6 lakh leading to the present litigation.*

- *A writ appeal filed by TNEB dismissed*
- *Judges refused to accept Board's contention*

மேல்முறையீட்டாளர் சான்றாதாரமாக 3வதாக கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார் :

உயர் அழுத்த மின்தடங்கள்– உயர் மின் அழுத்த கோபுரம் அமைக்கும் நிகழ்வில்– நில உரிமையாளர்களுக்கு வழங்க வேண்டிய இழப்பீடு குறித்து மத்திய எரிசக்தித் துறை வெளியிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் Guidelines for payment of compensation towards

damages in regard to right of way for transmission lines in the country. ஆனால் எதிர் மனுதாரர் இது வரை ஒரு பைசா கூட நஷ்டஈடு தரவில்லை.

5.4 ஆகவே திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், அய்யம்பாளையம் வருவாய் கிராம புல எண் 167/3, 165 / 4A – மற்றும் 165 /4C முழுவதும் தனக்கு சொந்தமானது எனவும், மேற்படி எதிர்மனுதாரர் எனது அனுமதி இன்றி எனது நிலத்தின் குறுக்கே மின் பாதை அமைத்துள்ளார். மேற்படி உத்தரவுகள் படி தனியார் நிலத்தில் சம்மதம் பெறாமல் நடப்பட்ட மின்கம்பத்தை / மின்பாதையை சொந்த செலவில் மின்வாரியம் இடமாற்றம் செய்திட உத்தரவிட மதிப்பிற்குரிய தங்கள் மேலான கவனம் வேண்டப்படுகிறது என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 முசிறி கோட்டத்திற்கு உட்பட்ட சேந்தமாங்குடி பகிர்மானத்தில் திரு அழகுமணி த/பெ ராசு, கதவு எண் 18, குறவன் குறத்தி குடித்தெரு அவர்கள் Tamilnadu Electricity Ombudsman யிடம் அளித்த மனு கடந்த 08.04.2024 அன்று செயற்பொறியாளர் இயக்குதலும் & காத்தலும் / முசிறி அலுவலகத்தில் பெறப்பட்டதாகவும், மனுவில் மேல்முறையீட்டாளர் அளித்த முறையீடு தொடர்பாக உதவிசெயற்பொறியாளர் / இயக்குதலும் & காத்தலும் / முசிறி மற்றும் உதவிமின்பொறியாளர் / இயக்குதலும் & காத்தலும் / அய்யம்பாளையம் அவர்கள், மேற்படி இடத்தை 23.04.2024 அன்று களஆய்வு செய்ததாகவும், களஆய்வின் போது புலஎண் 167/3ல் உயரழுத்த மின்பாதை 11KV MANGARAPETTAI FEEDER யும் புல எண் 165/4A மற்றும் புலஎண் 165/4C ல் SENTHAMANGUDI SS II 100 KVA ன் தாழ்வழுத்த மின்பாதை செல்வதும் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி புலஎண் 167/3ல் 11KV MANGARAPETTAI FEEDER உயரழுத்த மின்பாதையானது சுமார் 35 வருடத்திற்கு முன்னால் நிறுவப்பட்டுள்ளது என்பது திருமதி. ஆயினம்மாள் என்பவருக்கு வழங்கப்பட்ட 06–294–009–169 ல் இருந்து தெரிய வருகிறது என்றும், மேலும் HT மின்பாதை அமைக்கும் காலகட்டத்தில் எவ்வித ஆட்சேபனை தெரிவிக்காத காரணத்தினால் உயரழுத்த மின்பாதை அமைக்கப்பட்டு SENTHAMANGUDI SS VI 100 KVA மின்மாற்றி மூலம் சீரான மின்சாரம் வாரிய தரப்பில் வழங்கப்பட்டு வந்துள்ளதாகவும், எனவே மேல்முறையீட்டாளர் திரு

அழகுமணி த/பெ ராசு, கதவு எண்.18, குறவன் குறத்தி குடித்தெரு, நாச்சம்பட்டி ரோடு, கொள்ளுக்கட்டிபாளையம், முசிறி வட்டம், திருச்சி மாவட்டம் அவர்களின் 03.04.2024 நாளிட்ட மேல்முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்யும்படி மின்குறை தீர்ப்பாளர் அவர்களிடம் இந்த கடிதம் மூலமாக கேட்டுக் கொள்ளப்படுவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மேற்படி நிலத்தின் வழியாக செல்லும் மின்பாதைகளை வாரிய செலவில் வேறு பாதையில் மாற்றி அமைக்கும் படி மனுதாரரின் இந்த மனு தொடர்பாக முறையீட்டாளர் கடந்த 15.02.2024 அன்று தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மின்நுகர்வோர் குறைதீர் மன்றம் திருச்சி மின்பகிர்மான வட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டம் மன்றத்தில் மனு எண் 05/2024 எடுத்துக்கொள்ளப்பட்டு முறையாக விசாரணை செய்யப்பட்டு, மேற்பார்வை பொறியாளர் தலைவர் மின்குறை தீர்மன்றம் தி.மி.ப.வ/பெரு நகர் திருச்சி மற்றும் மன்ற உறுப்பினர்கள் 1, 2 களின் குழுவானது 23.02.2024 நாளிட்ட மன்ற ஆணையில் மேற்படி புலஎண்கள் 167/3 165/4A மற்றும் 165/4C ல் உள்ள மின்பாதையை DCW முறையில் விண்ணப்பம் அளித்து அதற்கான மதிப்பீட்டு தொகையை செலுத்தும் பட்சத்தில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதி Notification No TNERC/SPR/9/1, Dated: 21.07.2004 Distribution Standards of Performance–7. Shitting of Service Connection/Deviation of Lines and Shitting of Equipments–ன் படி மின்பாதையை மாற்றி அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர் மனுதாரருக்கு அறிவுறுத்தப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இவ்வழக்கில் மனுதாரர் கோருவது போல வாரிய செலவில் மனுதாரருடைய நிலத்தின் மேலே செல்லும் மின்பாதையை மாற்றி அமைக்க வாரிய விதிகளின் படி சாத்தியக்கூறுகள் இல்லை என மனுதாரருக்கு வலியுறுத்தப்பட்டு மன்ற தீர்ப்பு முடித்து வைக்கப்பட்டது என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மனுதாரர் குறிப்பிடும் புலஎண் 167/3ல் வாரிய தரப்பில் அமைக்கப்பட்ட மின்கம்பம் GIS Pole Loc No 29401791 மற்றும் GIS Pole Loc No 29401825 ஆனது 20 அடி உயரமும் 50 மீட்டர் இடையிலும் அமைக்கப்பட்டுள்ளது என்றும், இந்த புலஎண் 167/3, 165/4A மற்றும் 165/4Cல் மனுதாரர் மின்கம்பம் மற்றும் மின்பாதையில் எவ்வித இடையூறும் இல்லாமல் விவசாய சாகுபடி செய்து வருகிறார் என்பது களஆய்வில் எடுக்கப்பட்ட

போட்டோ நகல் மூலமாக தெளிவாக தெரிய வருவதாகவும், மேலும் 165/4A மற்றும் 165/4Cல் உள்ள SENTHAMANGUDI SS 100KVA ன் தாழ்வழுத்த மின்பாதையானது Load Bifurcation and Backfeeding Arrangement ற்காக மின்பாதை அகற்றப்படாமல் வைக்கப்பட்டுள்ளதாகவும், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், மின்நுகர்வோர் குறைதீர் மன்றம் மற்றும் மின்குறை தீர்ப்பாளர் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் ஆகிய மூன்று அமைப்புகளின் அரசு அலுவலர்களின் நேரத்தை வீண் அடித்ததோடு அரசு செலவில் மின்பாதையை மாற்றி அமைத்து அரசிற்கு பண விரையத்தை ஏற்படுத்த முயல்வது தெரிய வருவதாகவும், எனவே இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையம் உரிய நடவடிக்கை எடுக்கும்படி இக்கடிதம் மூலமாக தங்களுக்கு தகவல் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேலும் 35 வருவடங்களுக்கு முன்பு நிறுவப்பட்ட கிராமிய மின்பாதை அப்பகுதியில் உள்ள விவசாய நிலங்களுக்கு மின் இணைப்பு வழங்குவதற்காகவே நிறுவப்பட்டது. இதில் பெரும்பாண்மை நுகர்வோர் விவசாய மின் இணைப்பு பயனாளிகளே. மேலும் விவசாய நிலங்களுக்கு மின் இணைப்பு வழங்க அமைக்கப்பட்ட மின்பாதையானது விவசாய நிலங்களுக்கிடையே தான் அமைக்க இயலும். அக்காலகட்டத்தில் நிறுவப்பட்ட மின்பாதையில் எந்தவித ஆட்சேபனை எழுப்பாத நிலையில் தற்சமயம் மாற்ற எழுப்பும் கோரிக்கையை நிராகரிக்குமாறு எதிர்மனுதாரர் வலியுறுத்தினார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு:</u>

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தனது ஒப்புதல் இல்லாமல் திருச்சி, முசிறி கோட்டம், அய்யம்பாளையம் வருவாய் கிராமம், புல எண். 167/3, 165/4A மற்றும் 165/4C உள்ள நிலத்தில் அமைக்கப்பட்ட மின் கம்பம் மற்றும் மின்பாதைகளை வாரிய செலவில் வேறு பாதையில் மாற்றி அமைக்கும்படியும், இந்திய தொலைத்தொடர்பு சட்டம் 1885–ன் பிரிவு 10–ன்படியும் மற்றும் மின்சார சட்டம் 2003–ன் பிரிவு 164–ன் படியும் மின்கம்பமோ

அல்லது மின்பாதையையோ எந்த ஒரு நிலத்திலும் அமைப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. அதே சமயம் ஒரு நபருக்கு சொந்தமான நிலத்தில் மின்கம்பமோ அல்லது மின்பாதையையோ அமைக்கப்படவேண்டிய நேர்வில் இந்திய தொலைத்தொடர்பு சட்டத்தின் பிரிவு 10(4)–ன்படி நிலவுடமையாளருக்கு முழு நஷ்டஈடு தரப்பட வேண்டும் எனவும், ஆனால் எதிர்மனுதாரர் இது வரை நஷ்டஈடு தரவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

7.3 ஆகவே திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், அய்யம்பாளையம் வருவாய் கிராம புல எண் 167/3, 165 / 4A – மற்றும் 165 /4C முழுவதும் தனக்கு சொந்தமானது எனவும், மேற்படி எதிர்மனுதாரர் தனது அனுமதி இன்றி தனது நிலத்தின் குறுக்கே மின்பாதை அமைத்துள்ளதாகவும், மேற்படி உத்தரவுகள் படி தனியார் நிலத்தில் சம்மதம் பெறாமல் நடப்பட்ட மின்கம்பத்தை / மின்பாதையை சொந்த செலவில் மின்வாரியம் இடமாற்றம் செய்திட உத்தரவிட வேண்டும் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் முசிறி கோட்டத்திற்கு உட்பட்ட சேந்தமாங்குடி பகிர்மானத்தில் திரு அழகுமணி அளித்த முறையீடு தொடர்பாக உதவி செயற்பொறியாளர் /இ&கா/முசிறி மற்றும் உதவி மின்பொறியாளர் / இ&கா/அய்யம்பாளையம் அவர்கள், மேற்படி இடத்தை களஆய்வு செய்ததாகவும், களஆய்வின் போது புல எண் 167/3–இல் உயரழுத்த மின்பாதை 11KV மங்காரபேட்டை Feeder–ம், புல எண் 165/4A மற்றும் புல எண் 165/4C–இல் சேந்தமாங்குடி SS II 100 KVA ன் தாழ்வழுத்த மின்பாதை செல்வதும் உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

7.5 மேற்படி புல எண் 167/3ல் 11KV மங்காரபேட்டை Feeder உயரழுத்த மின்பாதையானது சுமார் 35 வருடத்திற்கு முன்னால் நிறுவப்பட்டுள்ளது என்பது திருமதி. ஆயினம்மாள் என்பவருக்கு வழங்கப்பட்ட மின் இணைப்பு எண் 06–294–009–169 ல் இருந்து தெரிய வருகிறது என்றும், மேலும் HT மின்பாதை அமைக்கும் காலகட்டத்தில் யாரும் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்காத காரணத்தினால் உயரழுத்த மின்பாதை அமைக்கப்பட்டு சேந்தமாங்குடி SS VI 100 KVA மின்மாற்றி மூலம் சீரான மின்சாரம் வாரிய தரப்பில் வழங்கப்பட்டு வந்துள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 மேல்முறையீட்டாளர் குறிப்பிடும் புலஎண் 167/3ல் வாரிய தரப்பில் அமைக்கப்பட்ட மின்கம்பம் GIS Pole Loc No 29401791 மற்றும் GIS Pole Loc No 29401825 ஆனது 20 அடி உயரமும் 50 மீட்டர் இடையிலும் அமைக்கப்பட்டுள்ளது என்றும், இந்த புலஎண் 167/3, 165/4A மற்றும் 165/4Cல் மனுதாரர் மின்கம்பம் மற்றும் மின்பாதையில் எவ்வித இடையூறும் இல்லாமல் விவசாய சாகுபடி செய்து வருகிறார் என்பது களஆய்வில் எடுக்கப்பட்ட போட்டோ நகல் மூலமாக தெளிவாக தெரிய வருவதாகவும், மேலும் 165/4A மற்றும் 165/4Cல் உள்ள SENTHAMANGUDI SS 100KVA ன் தாழ்வழுத்த மின்பாதையானது Load Bifurcation and Backfeeding Arrangement ற்காக மின்பாதை அகற்றப்படாமல் வைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 எனவே, இவ்வழக்கில் மனுதாரர் கோருவது போல வாரிய செலவில் மனுதாரருடைய நிலத்தின் மேலே செல்லும் மின்பாதையை மாற்றி அமைக்க வாரிய விதிகளின் படி சாத்தியக்கூறுகள் இல்லை எனவும், மேற்படி புல எண்கள் 167/3 165/4A மற்றும் 165/4C ல் உள்ள மின்பாதையை DCW முறையில் விண்ணப்பம் அளித்து அதற்கான மதிப்பீட்டு தொகையை செலுத்தும் பட்சத்தில் மின்பாதையை மாற்றி அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், எனவே மேல்முறையீட்டாளரின் மேல்முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்யுமாறு எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 இவ்வழக்கு சம்பந்தமாக மின்கம்பம், மின்பாதை மற்றும் மின்மாற்றி போன்ற மின்தளவாடங்களை அமைக்கும் பணிகளை செய்வதற்கு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்குள்ள 1985 காலகட்டத்தில் உள்ள அதிகார விதிமுறைகளை ஆராய விரும்புகிறேன்.

7.9 இந்திய மின்சார சட்டம், 1910, பிரிவு 51–இன்படி தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885–இல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின்கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"51. Exercise in certain cases of powers of telegraph authority. –*

*Notwithstanding anything in Sections 12 to 16 (both inclusive) and Sections 18 and 19, the State Government may, by order in writing, for the placing of electric supply-lines, appliances and apparatus for the transmission of energy or for the purpose of*

*telephonic or telegraphic communications necessaryfor the proper co-ordination of works, confer upon any public officer, licensee or any other person engaged in the business of supplying energy to the public under this Act, subject to such conditions and restrictions (if any) as the State Government may think fit to impose, and to the provisions of the Indian Telegraph Act, 1885 (13 of 1885), any of the powers which the telegraph-authority possesses under that Act, with respect to the placing of telegraph lines and posts for the purposes of a telegraph established or maintained by the Government or to be so established or maintained."*

7.10 மின்சார சட்டம் 1910, பிரிவு 51–இன்படி தந்தி தொலை தொடர்பு சட்டம் 1885–இல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின்கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு உரிமதாரருக்கு வழங்கப்பட்ட உரிமைகளை ஆராய விரும்புகிறேன்.

***"Part III***
***Power to Place Telegraph Lines and Posts***
***10. Power for telegraph authority to place and maintain telegraph lines and posts:-***

*The telegraph authority may, from time to time, place and maintain a telegraph line under, over, along, or across, and posts in or upon any immovable property:*

*Provided that:-*

1. *The telegraph authority shall not exercise the powers conferred by this section except for the purposes of a telegraph established or maintained by the [Central Government], or to be so established or maintained.*
2. *The [Central Government] shall not acquire any right other than that of user only in the property under, over, along, across in or upon which the telegraph authority places any telegraph line or post; and*
3. *Except as hereinafter provided, the telegraph authority shall not exercise those powers in respect of any property vested in or under the control or management of any local authority, without the permission of that authority; and*
4. *In the exercise of the powers conferred by this section, the telegraph authority shall do as little damage as possible, and, when it has exercised those powers in respect of any property other than that referred to in clause (c), shall pay full compensation to all persons interested for any damage sustained by them by reason of the exercise of those powers. "*

7.11 மேற்கண்டுள்ள இந்திய தொலைத்தொடர்பு சட்டம் 1885–இன் பிரிவு 10–இன்படி மின்கம்பமோ அல்லது மின்பாதையையோ எந்த ஒரு நிலத்திலும் அமைப்பதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய விதிமுறைகளின்படி உரிமதாரர் மின்பயன் பெற உரிமை கோரும் நுகர்வோருக்கு மின்பாதை அமைக்க உரிமையுள்ளது என தெரியவருகிறது.

7.12 மேலும், இது சம்பந்தமாக மின்சார சட்டம், 2003–இன் 68 (1), (2)(a) மற்றும் தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதி 29(6) –ஐ ஆராய விரும்புகிறேன்.

> *"68. Overhead lines*
> *(1) An overhead line shall, with prior approval of the Approprite Government, be installed or kept installed above ground in accordance with the provisions of sub–section (2).*
> *(2) The provisions contained in sub–section (1) shall not apply–*
> *(a) in relation to an electric line which has a nominal voltage not exceeding 11 kilovolts and is used or intended to be used for supplying to a single consumer".*

மேற்கூறிய மின்சார சட்டம் 68(2)(a)–இன்படி ஒரு தனிநபருக்கு மின்சாரம் வழங்கும் நேர்வில் 11 KV–க்குள் இருக்கும்பட்சத்தில் அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற வேண்டியது அவசியமில்லை என தெரியவருகிறது.

7.13 மேலும், எதிர்மனுதாரரின் வாதுரையிலிருந்து மேல்முறையீட்டில் குறிப்பிட்டுள்ள உயரழுத்த மின்பாதையானது சுமார் 35 வருடங்களுக்கு முன்பு நிறுவப்பட்டது என்பதும், அம்மின்பாதை அமைக்கப்பட்ட காலகட்டத்தில் எவ்வித ஆட்சேபனையும் பெறப்படவில்லை என்பதும் மேலும் மின் இணைப்பு விவசாய நிலங்களுக்கு வழங்கும் பட்சத்தில் மின்பாதை நிலங்கள் வழியாகதான் வழங்க முடியும் என்பதாலும், தற்பொழுது பெரும்பாண்மை விவசாய நிலங்களுக்கு மின் இணைப்பு பாதுகாப்பான முறையில் பராமரிக்கப்பட்டுவரும் உயர் மற்றும் தாழ்வழுத்த மின்பாதையை மாற்றித்தர கோரும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை TNERC Supply Code Regulation 6–ன்படி – பங்கீட்டு வைப்புத்தொகை திட்டத்தின் வாயிலாக விண்ணப்பிக்குமாறும், விண்ணப்பத்தின்பேரில் மதிப்பீடு தயார் செய்து மதிப்பீட்டுக் கட்டணம் செலுத்தும்பட்டித்தில் மின்பாதையை மாற்றிதர இயலும் என்ற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்று கொள்ளப்பட்டு மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

7.14 இருப்பினும் மேல்முறையீட்டாளர் மின்பாதையை மாற்றி அமைக்க விரும்பும் பட்சத்தில் மின்பாதை இடமாற்றம் செய்ய ஆகும் மதிப்பீட்டு செலவு யாரை சாறும் என்பதை அறிய தமிழ்நாடு மின்சார வழங்கல் விதி தொகுப்பு விதி 6–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"மின்இணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் மாற்றல் கட்டணம்:***

*(1) மின்னிணைப்பு / மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்க வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும். மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்க வேண்டும். அத்தொகை செலுத்தப்பட்ட பின்னரே இடமாற்ற பணி மேற்கொள்ளப்படும். "*

7.15 மேற்கூறிய விதியை ஆராயும்போது பாதுகாப்பாக நிறுவப்பட்ட நிலையிலிருந்து மின்பாதையை இடமாற்றம் செய்ய மேல்முறையீட்டாளர் கோரும்பட்சத்தில் உரிய மதிப்பீட்டு தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டும் என்பது தெரிய வருகிறது.

**8.0 <u>முடிவுரை</u>:**

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி, மேல்முறையீட்டாளர் 35 வருடங்களுக்கு முன்பே அமைக்கப்பட்ட உயரழுத்த மின்பாதை மற்றும் 165/4A & 165/4C–இல் உள்ள தாழ்வழுத்த மின்பாதையானது விவசாயம் செய்ய எந்தவிதமான இடையூறு இன்றி நிறுவப்பட்ட நிலையில் மாற்ற விரும்பினால் தமிழ்நாடு மின் பகிர்மான விதிமுறைகளின் படி மின்பாதையை மாற்றியமைப்பதற்கு ஆகும் உரிய தொகையை செலுத்தும்பட்சத்தில் மின்பாதையை தொழில்நுட்ப சாத்திய கூறுகளின் அடிப்படையில் மாற்றியமைக்க எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 21/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு.ரா.அழகுமணி, த/பெ.ராசு, – By RPAD
18, குறத்தி குடித்தெரு,
சேந்தமாங்குடி வடக்கு,
அய்யம்பாளையம், ஏவூர் அஞ்சல்,
முசிறி – 621202.

2. மேற்பார்வை பொறியாளர்,
**திருச்சி** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மன்னார்புரம் மெயின் ரோடு, திருச்சி – **620 020.**

3. செயற்பொறியாளர்/ இ&கா/ முசிறி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV முசிறி SS வளாகம், தாத்தயங்கார்பேட்டை ரோடு,
முசிறி, திருச்சி – 621 211.

4. உதவி செயற்பொறியாளர்/ இ&கா / முசிறி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110 KV முசிறி SS வளாகம், தாத்தயங்கார்பேட்டை ரோடு,
முசிறி, திருச்சி – 621 211.

5. உதவி மின்பொறியாளர்/ இ&கா / அய்யம்பாளையம்,
திருச்சி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ARK வளாகம், 5, 41–E1 சேலம் மெயின் சோடு,
அய்யம்பாளையம் அஞ்சல், முசிறி, திருச்சி – 621 202.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.